சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

E.A.No.181/2018

In

E.P.No.125/2017

2019 ம் ஆண்டு ஜுன் மாதம் 04 ஆம் நாள் ம.சா. 1 சாட்சி திரு. ஜெகதீசன் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969 ம் ஆண்டு 24 வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு. P. ஈஸ்வரமூர்த்தி, B.Sc.,L.L.B., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. ஜெகதீசன் | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

ம.சா.1 நீதிமன்ற அனுமதியின் படி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை

சர்வே எண்.379/1-ல் ஒரு ஏக்கர் பூமி எனக்கு பாத்தியப்பட்டது. அதே நான் இரண்டு தாக்குகளாக வாங்கினேன். 21-1/4 செண்ட் மட்டும் தான் எனக்கு பாத்தியம் என்று சொல்லியிருந்தால் அது தவறு. நான் கிரயம் வாங்கிய சர்வே எண்.379/1 ன் பூமி ஆதியில் பொங்கியா கவுண்டருக்கு பாத்தியம். அவர் எந்த வகையில் யாரிடமிருந்து சொத்தை வாங்கினார் என்றால் கிரயம் வாங்கினார் ஆனால் யாரிடமிருந்து வாங்கினார் என்றால் ஞாபகம் இல்லை. கோபி சார்வு நீதிமன்றத்தில் அ.வ.எண்.216/1993 சர்வே எண்.379/1 ஐ பொறுத்து தாக்கல் செய்துள்ளது என்றால் செப்டம்பர் மாதம் 2017-ம் ஆண்டிற்கு பிறகு தெரிந்துகொண்டேன். சர்வே எண்.379/1-ல் இந்த நிறைவேற்று மனுதாரருக்கு பாகம் உள்ளது என்று நீதிமன்றத்தில் தீர்வாகியுள்ளது என்றால் இந்த மனுவிற்கு பிறகு தெரிந்துகொண்டேன். முதல்நிலை தீர்ப்பாணை அடிப்படையில் பாகம் பிரிக்ககோரி இறுதிநிலை

தீர்ப்பாணைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மனுவிற்கு பிறகு தெரிந்துகொண்டேன். இந்த இறுதி நிலை தீர்ப்பாணையின்படி நிதிமன்ற ஆணையர் நியமனம்செய்யப்பட்டு அவர் அந்த சொத்துகளை பார்வையிட்டு சர்வேயர் உதவியுடன் அளந்து பிரித்து அறிக்கையர் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் என்னுடைய சொத்தை இதுவரை யாரும் வந்து அளக்கவோ, பார்வையிடவோ இல்லை. இந்த நீதிமன்ற ஆணையர் சொத்துகளை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அறிக்கையர் மற்றும் வரைபடம் தாக்கல்செய்துள்ளார் என்றாலும் நான் இந்த மனுவிற்காக வேண்டி என்னுடைய சொத்தை இதுவரை யாரும் வந்து அளக்கவோ, பார்வையிடவோ இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும், சுப்பிரமணியம் மகன் மூர்த்திக்கும் என்ன சம்மந்தம் என்றால் அவர் பொங்கியாகவுண்டரிடம் நான் வாங்கிய சொத்து போக பாக்கி சொத்துகளை கிரையம் வாங்கிய நபர். இந்த வழக்கில் மூர்த்தி ஒரு தரப்பினர் இல்லை. நான் தோட்டத்திற்கு போன போது அவர்தான் இந்த வழக்கை பற்றி என்னிடம் சொன்னார். மூர்த்திக்கு இந்த வழக்கு பற்றி தகவல் கிடைத்ததாக என்னிடத்தில் சொன்னார். 17.09.2018-ல் மூர்த்தி மூலமாக தான் இந்த வழக்கு விவரங்கள் தெரிந்துகொண்டதாக இந்த மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் இந்த வழக்க விவரங்கள் அனைத்தும் ஆரம்ப முதலே எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரியல்ல. 19.03.1940-ம் தேதியிட்ட ம.சா.ஆ.17 உயில் ஆவணத்தை நான் படித்து தெரிந்துகொண்டேன். அந்த உயில் யாரால் யாருக்கு எழுதிகொடுக்கப்பட்டுள்ளது என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த உயில் ஒரு கருப்பசாமிகவுண்டர் என்பவரால் எழுதப்பட்டது என்றாலும் அந்த காலகட்டத்தில் அவருக்கு இரண்டு பெண்மக்களும், ஒரு ஆண் மகனும் இருந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த உயில் ஆவணத்தில் கருப்புசாமி அவரது இரண்டு பெண்மக்களுக்கும், இனிமேல் பிறக்கும் பெண்களுக்கும், ஒரு ஆண் மகனுக்கும்,

இனிமேல்பிறக்கும் ஆண் மகனுக்கும் பங்கு உள்ளது என்று எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு அதைப்பற்றி எனக்கு தெரியாது. இந்த உயில் ஆவணத்தின் அடிப்படையில் தனக்கு பங்கு உள்ளது என்று வாதி வஞ்சிகொடி கோபி சார்பு நீதிமன்றத்தில் 1993-ல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது ஞாபகம் இல்லை. ம.சா.ஆ.17 உயில் ஆவணத்தில் நான் கிரயம் வாங்கின சொத்தின் சர்வே எண்.379/1 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. சர்வே எண்.379/1 பழைய சர்வே எண்கள்.117,118 மற்றும் 119 ஆகும். ம.சா.ஆ.17 உயில் ஆவணத்தின் சொத்து விவரத்தில் சர்வே எண். 117,118 மற்றும் 119 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த சர்வே எண்கள் 117,118 மற்றும் 119 தான் புதிய சர்வே எண்.379/1 ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சர்வே எண்.379 எவ்வளவு உட்பிரிவி செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. ஆனால் சர்வே எண்.379/1 ன் மொத்த விஸ்தீர்ணம் ஒரு ஏக்கர், மற்ற உட்பிரிவு பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய கோருரிமை மனுவில் சொத்து விவரத்தில் இறுதிநிலை தீர்ப்பாணையுடன் இணைக்கப்பட்டுள்ள EX.C5 வரைபடத்தில் A என்று குறிப்பிடப்பட்டுள்ள பு.ஏ.0.21-1/4 விஸ்தீரணமுள்ள பூமி மட்டும் என்று சொல்லியுள்ளேன் என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் சர்வே எண்.379/1 ன் A என்ற பகுதியில் 21-1/4 செண்ட் என்று அறிக்கையிலும் சொல்லப்பட்டுள்ளது. 21-1/4 செண்டிற்கு நான்கு எல்லைகள் எதுவும் நான் குறிப்பிடவில்லை. அந்த 21-1/4 செண்டும் என் பாத்தியப்பட்டது என்பதற்கு நான் என்னுடைய கிரய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். ஏற்கனவே தீர்வாகியுள்ள சொத்தை பொறுத்து நான் உரிமை எதுவும் கோர இயலாது என்பதாலும் இந்த வழக்கு விவரங்கள் அனைத்தும், ஆரம்ப முதலே எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் எனவே நான் கோரும் பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல. ஒரு வேளை 21-1/4 செண்டு மட்டும் எனக்கு பாத்தியம் என்று நீதிமன்றம் தீர்மானிக்கும் பட்சத்தில் நிறைவேற்று மனுதாரரின் மற்ற சொத்துகளை பொருத்து சுவாதீனம்

கொடுக்க எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை.

<u>மறுவிசாரணை இல்லை</u>

ஒ/ம். திரு. ஜெகதீசன் PW1

ஒ/ம். P. ஈஸ்வரமூர்த்தி
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்